மாலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 11 புதன்கிழமை 27.12.2023 அதிர்வு 149

## யாழில் டெங்கு நோயால் மேலும் ஒருவர் மரணம்!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணத்தில் டெங்குக் காய்ச்சலால் மேலும் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். 04▶



# இலங்கையில் அமைதி நிலவ அரசியல் தீர்வு மிக அவசியம்!

## விரைவில் விடைபெறும் நியூசிலாந்து தூதுவர் சம்பந்தனை நேரில் சந்தித்தபோது தெரிவிப்பு

(சீ.ஏ.தமிழ்மாறன்)

“இலங்கையில் அமைதி ஏற்பட - மக்கள் சுதந்திரமாக வாழ அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும்.”

- இவ்வாறு இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற 04▶





# மீண்டும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதே எமது இலக்கு

## மஹிந்த திட்டவட்ட அறிவிப்பு

அடுத்த தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற எதிர்பார்த்துள்ளோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தவிர எதிர்க்கட்சிக்குச் செல்லவோ அல்லது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறவோ எந்த எதிர்பார்ப்பும் இல்லை என்றும் அவர் கூறினார்.

கிரிந்திவெலயில் நடைபெறும் கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்ட மஹிந்த ராஜபக்ஷ, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்பட மாட்டாது. அவர்களில் எந்தத் தவறும் இல்லை. அடுத்த ஆண்டு தேர்தலும் நடைபெறவுள்ளது. 04▶



### 38 பவுண் தங்கத் தட்டு மாயமான விவகாரம்:

# கதிர்காமம் ஆலயத்தின் பிரதான பூசகர் கைது!

**வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குக் காணிக்கையாக வழங்கப்பட்ட 38 பவுண் தங்கத் தட்டு காணாமல்போன விவகாரம் தொடர்பான அந்த ஆலயத்தின் பிரதான பூசகர் சோமிபால டி. ரத்நாயக்க கைது செய்யப்பட்டுள்ளார்.**

ஆலயத்தின் களஞ்சியத்துக்குப் பொறுப்பாளராகப் பதவி வகித்த சூட்டி என்ற பிரியந்த சட்டத்தரணி ஊடாக கடந்த 19 ஆம் திகதி சரணடைந்ததை அடுத்து, அவர் திஸ்ஸமஹாராம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், பிரதான சந்தேகநபரான கதிர்காமம் முருகன் ஆலயத்தின் பிரதான பூசகர் சோமிபால டி. ரத்நாயக்க இன்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் சரணடைந்து 3 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

# உயர்தரப் பரீட்சைக்கு முன் டெங்கு ஒழிப்புத் திட்டம்



ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெறும் வளாகங்களைச் சுத்தப்படுத்தும் விசேட வேலைத்திட்டம் தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார பூச்சியியல் அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது என்றும் அந்தச் சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

“தற்போது தினசரி டெங்கு நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. மழைப்பொழிவு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருகின்றது. நுளம்பு வளர்ச்சிக்குச் சாதகமான சூழல் உள்ளது. ஜனவரி 4ஆம் திகதி உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது. இதன்படி, தேசிய டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் அறிவுறுத்தலின்படி, உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் இந்த டெங்கு ஒழிப்புத் திட்டம் துரிதமாக இடம்பெறும். இது டிசம்பர் 31ஆம் திகதிக்குள் முடிக்கப்படும்.” – என்றார்.

### மனைவியுடன் இலங்கை வந்த

# வெளிநாட்டுப் பிரஜை கடலில் மூழ்கி மரணம்

இலங்கைக்கு நத்தார் பண்டிகையைக் கொண்டாட வந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் காலி – பெந்தோட்டக் கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போது கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் டிட்டோ வொல்லோவ் என்ற 51 வயதான கஸகஸ்தான் பிரஜையாவார்.

இவர் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவதற்காகத் தனது மனைவியுடன் இலங்கைக்கு வந்த நிலையில் இருவரும் பெந்தோட்டவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், இவர் தனது மனைவியுடன் பெந்தோட்டக் கடலில் நீராடிக் கொண்டிருக்கும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.





# கண்டி நகரில் மரங்கள் முறிந்து வீழ்ந்து இருவர் காயம்; வாகனங்கள் சேதம்!

(மஸ்கெலியா நிருபர்)

கண்டி, திலக் ரத்நாயக்க மாவத்தையில் இரண்டு பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்ததில், இருவர் காயமடைந்தனர். அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 8 வாகனங்கள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இன்று (27) காலை 11 மணியளவில் அடுத்தடுத்து இருந்த இந்த மரங்களே இவ்வாறு வீழ்ந்துள்ளன.

இதனால், அந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிகள், கார்கள், வான், ஓட்டோ உட்பட 8 வாகனங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

காயமடைந்த இருவர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் ஆராய்வு

(த.சுபேசன்)

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனை, சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனை, சிறுவர், மகளிர் துஷ்பிரயோகம், திருட்டு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 32 கிராம அலுவலர் பிரிவுகளையும் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழு பிரதிநிதிகளுக்கும் சாவகச்சேரிப் பொலிஸாருக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று (24) ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் உப பொலிஸ் பரிசோதகர் பெரியசாமி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன கலந்து கொண்டு சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனை, சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனை, சிறுவர், மகளிர் துஷ்பிரயோகம், திருட்டு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.



போதைப்பொருள் கலாசாரம் மற்றும் ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழு மற்றும் பொது மக்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இரகசியத் தகவல்கள் வழங்கப்படும் பட்சத்தில் பொது மக்களுடைய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் எனவும் பொலிஸ் பொறுப்பதிகாரி உறுதியளித்துள்ளார்.

அத்துடன் கிராமத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்கும் முகமாக மாவட்ட பொலிஸ் டி.ஐ.ஜி. மற்றும் சாவகச்சேரிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரின் தொலைபேசி இலக்கங்கள் ஆகியன சிவில் பாதுகாப்புக் குழுவிடம் வழங்கப்பட்டன.

பொலிஸ்மா அதிபருடைய அறிவுறுத்தலுக்கு அமைவாக நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் சிவில் பாதுகாப்புக் குழுவை மீள இயங்கச் செய்து குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தச் சந்திப்பில் மதத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள், பொலிஸ் உப பரிசோதகர் ஜெயரூபன் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுக்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மாவீரர் நாளில் பிரபாகரனின் படம் தாங்கிய ரீசேட் அணிந்த வந்த இளைஞருக்குப் பிணை

(எஸ்.நிதர்ஷன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் படம் மற்றும் சின்னம் பொறித்த ரீசேட் அணிந்து மாவீரர் தினத்தில் பங்கெடுத்த குற்றச் சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர், இன்று சாவகச்சேரி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி கொடிகாமத்தில் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னம் மற்றும் தலைவர் பிரபாகரனின் புகைப் படம் தாங்கிய ரீசேட் அணிந்து கொண்டு பங்கேற்ற நிலையில் அன்றைய தினமே இராணுவத்தினரால் அந்த இளைஞர் கைது செய்யப்பட்டு கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.



இந்நிலையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மேற்படி இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த கொடிகாமம் பொலிஸார், அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த இளைஞர் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன், இளைஞரை விடுவிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக் களத்தின் அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பத்தை மன்றில் செய்திருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞரைப் பிணையில் விடுவிப்பதற்குச் சட்டமா அதிபர் ஆட்சேபனை தெரிவிக்காததையடுத்து இன்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேற்படி இளைஞரைப பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரின் சார்பில் சட்டத்தரணி தர்மகுலசிங்கம் அஞ்சனன் மன்றில் இன்று முன்னிலையாகி வாதாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மீண்டும் ஆட்சி...

கட்சியில் இருந்து விலகியவர்களுக்குப் பதிலாக புதியவர்கள் தொகுதி அமைப்பாளர்களாக நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே அதனைச் செய்துள்ளதாக நினைக்கின்றேன்.

அதேவேளை, போதைப்பொருள் விற்பனையாளர்களைக் கைது செய்யும் அரசின் நடவடிக்கை சிறந்தது. போதைப்பொருள் காரணமாக நாடு அழிந்து வருகின்றது.

வரி அறவீடுகளை இரத்துச் செய்ய முடியாது. வரி அறவீடுகள் இருக்கும். மக்களுக்கு நியாயமான வரி அறவீட்டு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கின்றேன்." – என்றார்.

### யாழில் டெங்கு நோயால்...

யாழ். அச்சுவேலி – தோப்பு பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சாரூரன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில், அச்சுவேலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மூளைச் சாவடைந்திருந்தார்.

அங்கு அவருக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாத்திரம் 71 பேர் டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு காரணமாக இரண்டு விடுதிகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன என்றும், குழந்தை நோயாளர் விடுதி நிரம்பியுள்ளது என்றும் வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை 11 மாத ஆண் குழந்தை ஒன்று டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்தது. அத்துடன் கடந்த சனிக்கிழமை டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு வழங்கப்பட்ட மருந்து ஒவ்வாமையால் அவரும் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையில் அமைதி...

உறுப்பினருமான இரா.சம்பந்தனை அவரது கொழும்பு இல்லத்தில் இன்று சந்தித்துப் பேசினார்.

இதன்போதே நியூசிலாந்து தூதுவர் மேற்கண்டவாறு கூறினார் என்று சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"இலங்கைக்கான தூதுவர் பதவியிலிருந்து விரைவில் விடைபெறவுள்ள நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டன் இன்று காலை என்னைச் சந்தித்தார். இது நல்ல சந்திப்பு. இதன்போது பல முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசினோம்.

அதிலும் முக்கியமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசினோம். இலங்கையில் அமைதியையும், நீதியையும் ஏற்படுத்தும் வகையில் நியாயமான – நிலையான அரசியல் தீர்வைக் காண வேண்டும் என்றும், அப்போதுதான் நாடு முன்னேற்றமடையும் என்றும் அவரிடம் நான் கூறினேன்.

அதேவேளை, சர்வதேச ஒப்பந்தங்கள், சர்வதேச வாக்குறுதிகள் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையும் அவரிடம் நான் தெரிவித்தேன்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீளிணைக்கப்பட வேண்டும் என்பதையும் அவரிடம் எடுத்துரைத்தேன்.

இவை தொடர்பில் இலங்கை அரசுக்கு நியூசிலாந்து உள்ளிட்ட அனைத்து வெளிநாடுகளும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தினேன்.

வடக்கு – கிழக்கில் தமிழ்பேசும் மக்கள் எதிர்நோக்கும் நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகள் தொடர்பிலும் அவரிடம் தெளிவுபடுத்தினேன்.

எனது கருத்துக்களை நியூசிலாந்து தூதுவர் ஏற்றுக்கொண்டார். தமது நாட்டில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது என்றும், அங்கு மக்கள் சுதந்திரமாக வாழ்கின்றார்கள் என்றும் கூறிய நியூசிலாந்து தூதுவர், அதே நிலைமை இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்று தமது நாட்டு அரசு விரும்புவதாகவும் தெரிவித்தார். இலங்கையில் அமைதி ஏற்பட அரசியல் தீர்வு கட்டாயம் காணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்குக்கு தான் நேரில் விஜயம் செய்து பல தரப்பினரையும் சந்தித்துப் பேசியதாகவும் அவர் என்னிடம் கூறினார். இலங்கைக்கும், இங்கு வாழும் அனைத்து இன மக்களுக்கும் நியூசிலாந்து தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் உறுதியளித்தார்." – என்று சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டார்.

# முந்தலில் மூன்று பாடசாலைகளில் திருடிய மாணவர்கள் இருவர் கைது!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் , முந்தல் பகுதியில் உள்ள மூன்று பாடசாலைகளில் உபகரணங்களை சேதப்படுத்தி , சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டின் கீழ் மாணவர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட மாணவர்களால் திருடப்பட்டதாகக் கூறப்படும் மடிக் கணினி, மைக், வைபை ரவுட்டர், புரஜெக்டர் உள்ளிட்ட உபகரணங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



முந்தல் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை உள்ளிட்ட இரண்டு ஆரம்ப பாடசாலைகளில் உபகரணங்களை சேதப்படுத்தி , உபகரணங்களையும் பணத்தையும் திருடியுள்ளமை முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைகளில் அலுவலகத்தில் இருந்த உபகரணங்களை சேதப்படுத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு இரண்டு தடவைகள் அந்தப் பாடசாலைகளுக்குள் புகுந்து பணத்தை திருடிய மாணவர்கள், அங்கு இருந்த உபகரணங்களையும் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அட்டாளைச்சேனையில் கிரிக்கெட்; மூன்று தினங்களுக்கு நடத்த ஏற்பாடு!

(கே. எ. ஹமீட், எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யபட்டுள்ள மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (29) அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பகல் இரவு போட்டிகளாக இடம்பெறும் இந்தச் சுற்றுப் போட்டி 29, 30 31 ஆம் திகதிகளில் இடம்பெறும். பழைய மாணவர்களின் 21 அணிகள் இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு 75 ஆயிரம் ரூபா பணப் பரிசும் சம்பியன் கேடயமும் வழங்கப்படவுள்ளன. இரண்டாமிடம் பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும் .

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் கடந்த காலங்களில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை ஒன்று சேர்த்து பாடசாலையின் அபிவிருத்தியில் அவர்களை ஒன்று சேர்க்கும் இந்த உன்னத வேலைத் திட்டத்தின் கீழ் இந்தச் சுற்றுபோட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வின் போது இந்தப் பாடசாலையில் கல்வி பயின்று உயர் நிலைப் பதவிகளில் கடமையாற்றி வருபவர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள் அழைக்கப்பட்டு கிரிகெட் வீரர்கள் சகிதம் அவர்கள் பாடசாலை வளாகத்தில் இருந்து அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானம் வரை நடைபவனியாக முஸ்லிம் சமய பண்பாட்டு விடயங்களுடன் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

# குடிதண்ணீர் பிரச்சினைக்கு கிடைத்துள்ளது தீர்வு





(எஸ். சினீஸ்கான்)

தம்பலகாமம் சிறாஜ் நகர் சிறாஜியா அரபுக் கல்லூரியின் நிர்வாகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த கோரிக்கைக்கமைவக ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் உருவாக்கப்பட்ட நீர்த்தாங்கி திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கால் திங்கட்கிழமை (25) கல்லூரியின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் சுபியான், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இமாம்தீன், மத்திய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேராயர் பேசும் தத்துவம்

வரும் திங்கட்கிழமை ஆண்டு பிறப்புடன் நாட்டில் வரி அறவீடு எல்லா மட்டங்களிலும் உயரப் போகின்றது. அதையொட்டி இன்றைய ஆங்கில நாளிதழ் ஒன்று அதன் ஆசிரியர் தலையங்கத்துக்குச் சரியான தலைப்பிட்டு இருந்தது.

'அமெரிக்க வரி; சோமாலிய வாழ்க்கை!' இதுதான் அந்தத் தலைப்பு. பிறக்கும் புத்தாண்டின் பின் இலங்கை மக்களின் வாழ்க்கை எப்படி இருக்கப் போகின்றது என்பதைப் படம் பிடித்துக் காட்ட இதை விட நல்ல தலைப்பு இருக்க முடியாது. இத்தகைய ஒரு மோசமான நாட்டுக்கும் மக்களுக்கும் எப்போது இவ்வாறான இக்கட்டில் இருந்து விடுதலை கிடைக்கும்? அது இப்போது இல்லை என்கின்றார் கொழும்பு பேராயர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித்.

"உயர் நீதிமன்றத்தின் ஆணையை துளியளவும் கவனத்தில் கொள்ளாத போக்கே இன்று எம்நாட்டில் காணப்படுகிறது. ஊழல்வாதிகளைப் பாதுகாக்கும் அரசாங்கமே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது." - என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கூறுகின்றார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு பிரதான நள்ளிரவு ஆராதனையின் போது ஆற்றிய உரையிலேயே அவர் இப்படி வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார்.

இலங்கையில் ஒருவேளை உணவைக்கூட சரியாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் எண்பது லட்சம் மக்கள் காணப்படுகின்றனர் என சில மாதங்களுக்கு முன்னர் தெரிய வந்தது. அந்த எண்ணிக்கை தற்போது இருமடங்காகியிருக்கக் கூடும். எதிர்காலக் கனவுகள் அனைத்தும் சிதைந்து போன நிலையிலேயே நாட்டிலுள்ள பலரும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இவற்றுக்கு மத்தியில் வரிச் சுமைய அதிகரிக்கின்றனர். பொருள்களின் விலைகளும் அதிகரிக்கின்றன. தொழில்களை இழந்து, பிள்ளைகளின் பசியைப் போக்க முடியாத நிலையில் பலரும் இன்று இந்த நாட்டில் உள்ளனர். இவ்வாறான நிலையிலும் உலகில் ஊழல், மோசடிகள் அதிகம் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை உயர்ந்த இடத்தில் காணப்படுகின்றமை உண்மையில் கவலைக்குரிய தாகும்.

ஊழல்வாதிகளை பாதுகாக்கும் அரசாங்கமே எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதால், இந்நாடு அதிலிருந்து விடுதலை பெறும் காலம் வெகு தொலைவில் உள்ளது.

- இவை எல்லாம் பேராயர் தெரிவித்த கருத்துகள்.

அவர் கூறியவை எல்லாம் உண்மைதான். உயர்நீதிமன்ற உத்தரவைக் கூட மதிக்காத அரசுதான் நாட்டில் இருக்கின்றது. ஆனால் அத்தகைய அநீதியான - அராஜகமான - அரசு இந்த நாட்டில் நிலை கொண்டு ஆட்சி அதிகாரத்தில் தொடர்வதற்கு தங்களைப் போன்ற மதத்தலைவர்களே பிரதான காரணம் என்பதை அவர் மறந்து, தத்துவம் உரைக்கின்றமைதான் விசனத்துக்குரியது.

நீதியும், நியாயமும், அறமும், தார்மீகமும் மதம், மொழி, இனம், நாடு கடந்தவை. அந்த நீதியையும், அறத்தையும், நியாயத்தையும், எடுத்துரைப்பதும் வலியுறுத்துவதும் அவற்றைப் பற்றி நிற்பதும் அவர் போன்ற மதத் தலைவர்களின் தலையாய கடமை. அந்தக் கடமையை அவ்வாறான மதத் தலைவர்கள் இனவாதப் போக்கிலும், மத சார்பு எண்ணத்திலும் ஓரவஞ்சகமாகக் கடைப்பிடித்து, பொறுப்பின்றி செயற்பட்டால் நாட்டில் இதுபோன்ற அராஜக அரசுகள் பிறப்பெடுத்து, நிலையூன்றுவது தவிர்க்க முடியாத கட்டாயமானதுதான்.

இந்த இலங்கை தீவில் 'பயங்கரவாதத்தை அழித்தல்' என்ற பெயரில் தமிழ் மக்கள் பல்லாயிரம் பேர் கொன்று குவித்து வேட்டையாடப்பட்ட போது, ஒரு மதத் தலைவருக்குரிய அடிப்படைக் கடமைகளை ஆற்றாத ஒரு கோழை மதவாதியாக இருந்தவர் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் என்பதே தமிழர்களின் கணிப்பீடு. வரலாற்றில் இல்லாத மோசமான கொடூரங்களை சிங்களப் படைகள் மேற்கொண்ட போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக - நீதிக்காக - நியாயத்துக்காக - குரல் எழுப்பாமல், அந்தப் படைகளை ஆசீர் வதித்து, கொடூரங்களை வரவேற்றுப் பார்த் திருந்தவர் அவர். நீதியை உரைக்கத் திராணி இல்லாத - இனவாதப் போக்கில் கோழை யாக செயல்பட்டவர். இன்றும் கூட அந்த மக்களுக்காக - அவர்களுக்கு நீதி செய்யப்படுவதற்காக - இன்னமுமே குரல் எழுப்பாதவர்.

நீதியையும் நியாயத்தையும் உரைக்க முடியாத - கண்ணுக்கு முன் நடக்கும் அராஜகங்களை கண்டிக்க வக்கற்ற - பாதிக்கப்பட்ட ஓர் இனத்திற்காக குரல் எழுப்ப முதுகெலும்பற்ற - மத தலைவர்கள் இந்த நாட்டில் மக்களை வழிநடத்தும் போது, உயர் நீதிமன்ற உத்தரவுகளை மதிக்காத அரசுகள்தான் நிலை நிறுத்தப்படும். அதுதான் இயற்கை நீதியும் விதியும்.

'பேய் அரசாண்டால் பிணம் தின்னும் சாத்திரங்கள்'. அது தவிர்க்க முடியாத உண்மை. பேயை ஆசீர்வதித்தவர்கள் உண்மைகளை மறந்து விடக்கூடாது.



# கொழும்பு, வெள்ளவத்தை பெண்கள் கல்லூரி பரிசளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு, வெள்ளவத்தை இந்து பெண்கள் (சைவ மங்கயர் வித்தியால யம்) கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி அருந்ததி ராஜவிஜயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீட பேராசிரியர் கலாநிதி ராஜேந்திர சுரேந்திரகுமரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.பாடவிதான மற்றும் இணைப்பாடவி தான செயற்பாடுகளின் திறமைகளை வெளிப்படுத்திய மாண விகள் இந்த நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.









# புத்தளம் அல் - கலம் கல்வி நிறுவன பரிசளிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் அல் – கலம் கல்வி நிறு வனத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு புத்தளத்தில் உள்ள கே. ஏ. பாயிஸ் மண்டபத்தில் அல் – கலம் கல்வி நிறு வனத்தின் நிர்வாகத் தலைவர் வைத் தியர் சஜீத் தலைமையில், அதிபர் அல் காரி எம். டீ. எம். பௌஸான் வழிகாட்ட லில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகப் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் அலி சப்ரி ரஹீம், விசேட அதிதி களாக மதுரங்குளி மேர்சி லங்கா கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் முனாஸ், புத்தளம் கதீஜா பெண்கள் அரபுக் கல்லூரியின் நிர்வாகத் தலைவர் அல்ஹாஜ் ஜஃப்ரிஷ், முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பிரமுகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் புத்தளம் அல் – கலம் கல்வி நிறுவனத்துக்காக புத்தளம் மன்னார் வீதியில் சுமார் 2 கோடி பெறுமதியான காணி ஒன்றைப் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் அலி சப்ரி ரஹீம் தமது சொந்த நிதியிலிருந்து வழங்கியமை நினைவு கூரப்பட்டது.



# பாலமுனை ரைஸ் ஸ்டார் புதிய நிர்வாகம் தெரிவு

(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை ரைஸ் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று (26) அல் ஹிதாயா மகளீர் கல்லூரியில் இடம் பெற்றது.

புதிய ஆண்டுக்கான நிர்வாக உறுப்பினர்கள் விவரம் வருமாறு,

தலைவர் ஐ.எல்.எம். பாயிஸ், செயலாளர் எம்.ஏ. சிபான், பொருளாளர் ஐ.ஆ.ஹம்தான், உப தலைவர் வை. எம். அசாம், உப செயலாளர் ஏ.எல். அஸ்மின்.

நிர்வாக உறுப்பினர்கள் – எம்.ஐ.எம். மனாப் – ஸ்தாபக உறுப்பினர், எம். எவ். பர்ஹான், ஐ.எல்.எம். பாரிஸ் – நீதிமன்ற உத்தியோகத்தர், எம்.ஏ. அப்துல் அலீம், எம்.சாஜின், எம்.ஏ. றினாஸ் , ஏ. எம். ஜுபான்.கணக்குப் பரிசோதகர் எம்.எவ். பர்ஸாத்.

ஏனைய விளையாட்டுக்களின் தலைவர்கள் – உதைபந்து – எம். ஐ. அஸாம், கிரிக்கட் – ஏ.ஆர். பையிஸ், எல்லே – கே.ஆர்.கியாஸ், கடினபந்து – ஏ.எல். எம். சீத், கடினபந்து உபதலைவர் – யு.ஆசிக், றகர் – என்.நஸீல், தடகளம் – ஏ.சனூஸ், கபடி– ஏ.எல். அம்றுல்லாஹ், கரப்பந்து – எம்.என். இனாமுல் ஹக், ஹொக்கி – லு.ஜர்பான்.

நீதிமன்ற உத்தியோகத்தர் – துரோபோல் – எம்.என்.எம். முஸ்னித், ஊடகம் – எம்.என். றுகைமி அகமட் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.




# கற்ற பாடசாலைக்கு உதவிய மாணவர்கள்

(எம். எப்.நவாஸ்)

ஒலுவில் – அல் ஹம்றா தேசிய பாடசாலையில் 2001 சாதாரணதரம் கற்ற மாணவர்களால் அந்தப் பாடசாலைக்குச் சீசீரிவி கமரா தொகுதி வழங்கப்பட்டது.




இந்த நிகழ்வு நேற்று (26) அல் ஹம்றா தேசிய பாடசாலையின் அஷ்ரப் ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் ‘2001 ஹம்றா’ அமைப்பின் தலைவர் எம்.ஏ.ஏ.பாரிஸ் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதியாக ஒலுவில் ஜும்ஆ பெரியபள்ளிவாசல் தலைவர், பொறியியலாளர் . ஏ.எம். றாபி கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக ஒலுவிலில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களான ஏ.எல்.ஜப்பார், ஏ.எல்.முத்தார், கே.எல் அமீர், ஏ.எல். வாறூன், உதவி அதிபரான எம்.எச்.எம்.நஸீம் மஹ்மூத் மற்றும் இம்முறை அதிபர் சேவைக்கு தெரிவான ஐ.அகமட் ஜுமான், அல் ஹம்றா தேசிய பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலளார் கே.றஷாக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இரண்டாம் அங்கமாக ஒலுவிலில் உள்ள அனைத்து பாடசாலைக்களுக்கும் ஒரு தொகுதி காகிதாதிகள் அந்தப் பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்து சமூகமளித்த அதிபர்களிடமும் ஆசிரியர்களிடமும் வழங்கப்பட்டன. நிகழ்வை நினைவூட்டும் முகமாக பாடசாலையின் மாநாட்டு மண்டபத்தின் முன்றலில் மூன்று மரங்களும் அதிதிகளால் நடப்பட்டன.



# அட்டாளைச்சேனை ஸஹ்றாவில் மாணவர், ஆசிரியர்கள் கௌரவிப்பு

(எம். எப். நவாஸ்)

தேசிய ரீதியிலான அறிவுத்தகைமை பரீட்சையில் வியத்தக அடைவுகளைப் பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை ஸஹ்றா வித்யாலயத்தில் பாடசாலை சமூக தலைவர் ஏ எஸ் எம். நௌசாத் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. எம். றஹ்மத்துல்லாஹ்கும் கௌரவ அதிதியாகக் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பையும் மற்றும் அதிதிகளாக பிரதிக் கல்வி பணிப்பாளர்களான ஏ. மொஹமட் ஹசின், ஏ.ஜி. பஸ்மில், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. எம்.நௌபர்டீன், எஸ். அம்ஜத்கான், கோட்டக்கல்வி பணிப்பாளர்



எம். எச். எம். ரஷ்மி, பாடசாலை அதிபர் எம். எஸ். முகம்மட் பைறூஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது சித்தியடைந்த மாணவர்களும் விடய ஆசிரியர்களும் நினைவுச் சின்னம் வழங்கிப் பொன்னாடைபோர்த்திக்கௌரவிக்கப்பட்டனர்.

இதன் போது கலை கலாச்சார நிகழ்வுகள் மிகப்பிரமாண்டமாக இடம்பெற்றன.

# தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இன்று கடும் காற்றால் வீடுகள் சேதம்

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் இன்று (27) அதிகாலை வீசிய சுழல் காற்றுக் காரணமாகப் பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவின் பத்தினிபுரம், இக்பால் நகர்முதலான பகுதிகளில் சுமார் ஐந்துக்கு மேற்பட்ட வீடுகளதும் கடை ஒன்றினதும் கூரைகள் அள்ளி வீசப்பட்டுள்ளன.

கனமழையுடன் வீசிய காற்றுக் காரணமாக வீடுகளின் கூரைகள் மற்றும் பயன் தரும் மரங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூரைகள் சேதமடைந்த நிலையில் தங்க இடம் இன்றிப் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குடியிருப்பு பகுதிகள் சேதமடைந்துள்ளதால் தங்குவதற்கு இடமின்றிப் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் தங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.







# சாய்ந்தமருது அல் ஹிலாலில் சேவை நலன் பாராட்டு விழா!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் ஓய்வுபெற்ற மூன்று ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 30 ஆசிரியர்களுக்குமான பிரியாவிடை வைபவமும், மேஜராகப் பதவியுயர்வு பெற்ற எம்.எஸ்.எஸ். சிப்லி, கல்வி முதுமாணிப் பட்டம் பெற்ற ஏ.எம். ஜாசிர், கே.எம்.நாசர், சட்டத்தரணியாகப் பட்டம் பெற்ற நிம்சாத் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றன.

நிகழ்வுக்கு அதிதிகளாகக் கல்முனை வலயத்தின் கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், அம்பாறை மாவட்ட பிரதான பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், பொறியியாலாளர் எம்.சி.கமால் நிசாத், ஆசிரிய ஆலோசகர் அன்சார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



விசேட நிகழ்வாகச் சாய்ந்தமருது கோட்டத்துக்கு அரும்பணியாற்றிய ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹ் றூன் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பின்தங்கிய பாடசாலையான சம்புநகர் அல்-மினா வித்யாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இஸ்லாமிய ரிலீப் நிறுவனத்தால் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் (26) வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் எம். ஐ. ரியாஸ் மற்றும் சிறுவர் மகளிர் பிரிவு உத்தியோகத்தர்கள், பிரிவு கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மாணவர்கள் கலந்து கொண்டனர்.











# திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் இன்று காலையில் திருவாதிரை தீர்த்தம்

(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் வருடாந்த திருவெம்பாவை உற்சவத்தின் திருவாதிரை தீர்த்தம் இன்று (27) புதன்கிழமை காலை 6.15 மணியளவில் பக்திப்பரவசத்துடன் நடைபெற்றது.

குருகுலப்பணிப்பாளர் கண இராஜரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நள்ளிரவில் ஆருத்ரா அபிஷேகம் இடம்பெற்றது.

அதிகாலையில் ஆருத்ரா தரிசனமும் அதனை அதனைத் தொடர்ந்து குருகுலத்தின் தீர்த்தக் கிணற்றில் தீர்த்த உற்சவம் இனிதே நிறைவேறியது.

கௌரி அம்மன் ஆலய பிரதம குரு. நிலோஜன் ஐயா கிரியைகளை நடத்தினார்.

அதனைத்தொடர்ந்து திருவம்பாவை பூசையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான அப்பியாச கொப்பிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இல்ல செயலாளர் பா.சந்திரேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# வெலிகம அறபா கல்லூரிக்கு உதைபந்தாட்ட உபகரணங்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெலிகம பிரீடம் விளையாட்டுக் கழகத்தினர் வெலிகம அறபா தேசிய கல்லூரியின் உதைபந்தாட்ட துறையை விருத்தி செய்யும் நோக்கில் ஒரு தொகுதி உதைபந்தாட்ட உபகரணங்களை கல்லூரி அதிபர் எம்.ரீ.எம்.முதாஹறிடம் அண்மையில் வழங்கினர்.

இந்த நிகழ்வில் பிரீடம் விளையாட்டுக்கழகத்தின் தலைவி சந்துசி நேத்மி முனசிங்க, தெனியாய உதைபந்தாட்ட லீக் தலைவர் அஸித்த தரங்க , கல்லூரி உதைபந்தாட்ட அணித் தலைவர், பழைய மாணவர் சங்கச் செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# களுவாஞ்சிக்குடியில் 45 பிரிவுகளிலும் அனுஷ்டிக்கப்பட்ட பாதுகாப்பு தினம்

(வி.ரி.சகாதேவராஜா)

உலகை உலுக்கிய சுனாமி அனர்த்தத்தை நினைவு கூரும் தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது ஏற்பாடு செய்த பிரதான நிகழ்வு நேற்று (26) பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதனை முன்னிட்டு அனர்த்தங்களில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து பிரார்த்தனை செய்யப்பட்டது.

இவ்வாறான இழப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பான பொது மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் சுனாமி அனர்த்தத்தில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான தயார்ப்படுத்தலை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வு அனர்த்த முகாமைத்துவ சேவை அபிவிருத்தி உத்தியோகத்தரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

விசேட நிகழ்வாக மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது பொது மக்கள், ஆலய பரிபாலன சபையினர், கிராம, மாதர் அபிவிருத்தி சங்கம், விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இதில் விசேட அம்சமாக பிரதேச செயலக பிரிவின் 45 கிராம சேவகர் பிரிவுகளிலும் தேசிய பாதுகாப்பு தின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.







# கல்முனை ஸாஹிரா பவளவிழாவை முன்னிட்டு அறிவுச்சுடர் போட்டிகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு றியோ மார்கட்டிங் நிறுவனத்தின் அனுசரணையில் அறிவுச் சுடர் ஸீசன் 2 கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும், அறிவுச் சமர் கலை மன்றமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த அறிவுச் சமர் போட்டியில் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி, நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை, காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி, மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை என்பன பங்கேற்கவுள்ளன.





# களஞ்சியசாலை உடைத்துத் திருட்டு சம்மாந்துறை பொலிஸ் விசாரணை






(பாறுக் ஷிஹான்)

களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 10 நெல் மூடைகள் 2 பசளைகள் என்பன கதவு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடங்கா 2 கிராம சேவையாளர் பிரிவில் நேற்று செவ்வாய்க்கிழமை (26) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்துச் சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ். ஜெயலத் தலைமையில் பெருங் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழு புலன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் சம்பவ இடத்துக்குத் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# ஆஸியில் உருவான முதலாவது விண்கலம் வானில் ஏவப்படுகிறது!



● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆஸ்திரேலிய மண்ணில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம் விண்ணில் ஏவப்படுகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ராக்கெட் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குயின்ஸ்லாந்தில் உள்ள ஏவு தளத்தில் இருந்து ஏவத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம்

கோல்ட் கோஸ்ட்டைத் (GOLD COAST) தளமாகக் கொண்ட நிறுவனமான ‘கில்மோர் ஸ்பேஸ்’ அமைப்பான ‘எரிஸ்’ என்ற பெயரில் இறுதித் தயாரிப்புகளை முடித்துள்ளது. இது 2024 மார்ச் மாதத்தில் ஏவப்படும் என்று நம்புகிறது.

25 மீற்றர் உயரமும், 30 தொன் எடையும் கொண்ட மூன்று நிலை எரிஸ் ராக்கெட் ஐந்து ஹைப்ரிட் என்ஜின்களால் இயக்கப்படுகிறது. அவை திட எரிபொருள் மற்றும் ஒரு திரவ ஆக்சிடரைசரைக் கொண்டுள்ளன.

முதலில் 2023 இல் புறப்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட எரிஸ் விண்கலம், 500 கிலோ மீற்றர் உயரத்தில் உள்ள பூமத்திய ரேகை சுற்றுப் பாதையில் ஏவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் ஒப்புதல்கள் உட்பட பல்வேறு ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்ற பிறகு, ‘கில்மோர் ஸ்பேஸ்’ இப்போது புதிய ஆஸ்திரேலிய விண்வெளி ஏஜென்சியின் இறுதி ஏவுகணை ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டி உள்ளது.




## குயின்ஸ்லாந்தில் ஏவுப்படுல்

குயின்ஸ்லாந்தில் உள்ள போவெனுக்கு வெளியே பிரத்யேகமாகக் கட்டப்பட்ட ஏவுதளத்தில் இங்கு தயாரிக்கப்பட்ட ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ராக்கெட் ஏவப்படுகிறது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகக் கருதப்படுகிறது.

1950களின் போது அமெரிக்க மற்றும் பிரித்தானிய ராக்கெட்டுகள்



தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள வூமேரா சோதனை தளத்திலிருந்து ஏவப்பட்டன. மேலும் எரிஸ் வெற்றி பெற்றால், விண்கல தொழில்நுட்பத்தை அணுகும் 12 ஆவது நாடாக ஆஸ்திரேலிய மாறும்.

நாங்கள் வேறொருவரின் தொழில்நுட்பத்தை நம்பியுள்ளோம். ஆனால் இப்போது இது எங்களுடையது, நாங்கள் இதை வடிவமைத்துள்ளோம், ஆஸ்திரேலியாவில் இதை உருவாக்கியுள்ளோம். இது ஆஸ்திரேலிய உருவாக்கம் என்று முன்னாள் வங்கியாளரும் வாழ்நாள் விண்வெளி ஆர்வலருமான கில்மோர் கூறியுள்ளார்.

எனவே, ஆஸ்திரேலியா என்ன விரும்புகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மேலும் எங்கள் முக்கிய கூட்டாளிகள் அனைத்தும் நூற்றுக் கணக்கான மில்லியன் முதல் பில்லியன் டாலர்களை ஏவுதளத் திறனுக்காகக் கொட்டி வருகின்றன என்பதை உணர வேண்டும் என்று விண்வெளி ஆர்வலர் கில்மோர் தெரிவிக்கிறார்.

## ஆஸ்திரேலிய விண்வெளித்துறை

ஆஸ்திரேலியாவின் வளர்ந்துவரும் விண்வெளித் துறையின் உறுப்பினர்கள், 2022 தேர்தலுக்குப் பிறகு, இந்தத் துறையில் அரசு கவனம் செலுத்தாததால், லாபகரமான வாய்ப்புகள் இழக்கப்படுவதைப் பற்றித் தொடர்ந்து எச்சரிக்கையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தொழில் மற்றும் அறிவியல் அமைச்சர் எட் ஹுசிக், இயற்கைப் பேரழிவுகள், விவசாயம் மற்றும் கடல் கண்காணிப்பு பற்றிய தரவுகளைச் சேகரிக்க ஆஸ்திரேலிய செயற்கைக் கோள்களை உருவாக்குவதற்கான மாரிசன் அரசின் திட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு மே மாதம் ‘கில்மோர் ஸ்பேஸ்’ தொழிற்சாலைக்கு விஜயம் செய்த பிரதமர் அந்தோனி அல்பானீஸ் எரிஸ் விண்கல திட்டத்தை “ஒரு சிறந்த ஆஸ்திரேலிய வெற்றியின் கதை” என்று அறிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ராக்கெட்டை நீங்கள் பார்க்கிறீர்கள், அது வான் சுற்றுப்பாதையில் ஏவுவதற்கு வெற்றிகரமாக முயற்சிக்கிறது என்று பிரதமர் அந்தோனி அல்பானீஸ் கூறியுள்ளார்.





# காக்காமுனை முன்பள்ளி பரிசளிப்பு!

(எஸ். சினீஸ் கான்)

காக்காமுனை றோயல் முன்பள்ளி மாணவர்களின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் கிண்ணியா பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நிகார் உட்பட பல கல்வி ஆளுமைகளும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.



# நுவரெலியாவில் தேசிய பாதுகாப்பு தினம்

(மஸ்கெலியா நிருபர்)

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று நிகழ்வுகள் (26) இடம்பெற்றன.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் நுவரெலியா மாவட்ட செயலர் நந்தன கலபொட வழிகாட்டலில் 2004 சுனாமியில் உயிரிழந்தவர்களுக்காக சர்வமத வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் (நிர்வாகம்) சுஜீவ போதிமான்ன, மேல திக மாவட்ட செயலர் (காணி) தினிகா கவிசேகர, அனர்த்த முகாமைத் துவ உதவிப் பணிப்பாளர், நுவரெலியா பிரதேச செயலர், உதவி மாவட்ட செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.



# காற்றில் கலந்த அமோனியா வாயு: பொதுமக்கள் எதிர்ப்பு போராட்டம்!





தமிழ்நாட்டின் சென்னை எண்ணூர் பெரிய குப்பம் பகுதியில் உள்ள உர தொழிற்சாலையில் இருந்து கடலுக்கடியில் செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டு நள்ளிரவில் திடீரென அமோனியம் வாயு வெளியேறியதால் அந்த பகுதி மக்கள் பலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு நேயாளர் காவுவண்டி மூலம் மருத்துவமனைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனால், பதற்றம் அடைந்த பொதுமக்கள் தங்களை வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர்.

இதனை தொடர்ந்து பொதுமக்கள் பதற்றம் அடையாமல் வீடுகளுக்கு செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர்.

இதனிடையே, எண்ணூர் கடல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தனியார் தொழிற்சாலையின் திரவ அமோனியம் எடுத்து வரும் குழாயிலிருந்து அமோனியா வாயு கசிந்ததை மாசு கட்டுப்பாட்டு வாரியம் உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில், அமோனியம் வாயு வெளியேறிய தனியார் தொழிற்சாலையை பொதுமக்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழிற்சாலையின் நுழைவுவாயிலில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாருடன் பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பரபரப்பை ஏற்பட்டது.

வாயு கசிவு குறித்து தொழிற்சாலை நிறுவனம் எந்த முன் அறிவிப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

வீதியில் சென்றவர்கள் தான் வீட்டு கதவுகளை தட்டி வெளியே வருமாறு கூறினர்.

அதன்பின்னரே வாயு கசிவு விவரம் குறித்து தங்களுக்கு தெரியவந்ததாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கடலில் வாயு கசிந்ததால் வாழ்வாதாரம் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீண்டும் மருத்துவமனையில் அனுமதி!



நடிகர் மற்றும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விஜயகாந்த் உடல்நலக்குறைவு காரணமாக நவம்பர் மாதம் 18 ஆம் திகதி நந்தம்பாக்கத்தில் உள்ள மியாட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சில வாரங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் பூரண குணமடைந்து வீடு திரும்பி இருந்தார்.

இந்த நிலையில், உடல் நலக்குறைவு காரணமாக விஜயகாந்த் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், தே.மு.தி.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வழக்கமான பரிசோதனைக்காக விஜயகாந்த் மருத்துவமனை அழைத்து வரப்பட்டுள்ளார் எனவும், பரிசோதனை முடிந்து நாளை மறுநாள் வீடு திரும்புவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய அரசு மீது வீண்பழி சுமத்துகிறது தமிழக அரசு: அண்ணாமலை கண்டனம்

தமிழக வெள்ள பாதிப்பு விவகாரத்தில் மத்திய அரசு மீது தமிழக அரசு வீண்பழி சுமத்துகிறது என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

திருச்சி விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

" திருச்சி விமானநிலைய புதிய முனையத்தை ஜனவரி 2 ஆம் திகதி பிரதமர் மோடி திறந்து வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரவில்லை.

தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் குறித்த பிரச்சினை ஏற்பட்டபோது, அதுகுறித்து பேசிய என் மீது சென்னையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால், அப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாக பேசிய எம்.பி. தயாநிதிமாறன், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்யவில்லை. பொருளாதாரத்தில் 2 ஆவது இடத்தில் இருந்த தமிழகம், தற்போது 3 ஆவது இடத்துக்கு பின்தங்கியிருப்பதன் மூலம் தி.மு.க. ஆட்சியின் செயல்பாடு தெரிகிறது." என்றார்.

# இஸ்ரேலிய தூதரகம் அருகே வெடிவிபத்து: உலக நாடுகளிலுள்ள தூதரகங்கள் எச்சரிக்கை!







புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு அருகே நேற்று மாலை வெடிவிபத்து சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

எனினும் இதன்காரணமாக உயிர் சேதங்களோ காயங்களோ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தை அடுத்து இந்திய அதிகாரிகள் இன்னும் அந்த பகுதியை ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்தநிலையில் இந்தியாவில் உள்ள தனது குடிமக்களை, குறிப்பாக புதுடில்லியில் உள்ளவர்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு இஸ்ரேல் வலியுறுத்தியது.

பாலஸ்தீன காசா பகுதியில் ஹமாஸ் போராளிகளுக்கு எதிராக இஸ்ரேல் தனது எதிர் தாக்குதலை தொடங்கியதில் இருந்து, யூத எதிர்ப்பு தாக்குதல்கள் அதிகரித்து வருவதால், உலகம் முழுவதும் உள்ள இஸ்ரேலிய தூதரகங்கள் எச்சரிக்கையுடன் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5:20 மணியளவில் புதுடில்லி தூதரகத்திற்கு அருகாமையில் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

2021 ஜனவரியிலும் புதுடில்லியில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் அருகே யாருக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் ஒரு சிறிய குண்டு வெடிப்பு சம்பவம் பதிவானது.

எனினும், இந்த குண்டுவெடிப்பை பயங்கரவாத சம்பவமாகவே கருதுவதாக இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

# இன்னும் பல மாதங்களுக்கு காசாவில் போர் தொடரும்!

## இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி தெரிவிப்பு

காசாவில் ஹமாஸ் தரப்பினருடனான போர் இன்னும் பல மாதங்களுக்கு தொடரும் என்று இஸ்ரேலிய இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தீர்வுகள் எதுவும் இல்லை எனவும் அவர் ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் போர் முடிவடையும் நிலையில் இல்லை என முன்னதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் குறிப்பிட்டிருந்தார்.



இந்த நிலையில் மத்திய காசா வரையில் தங்களது தரைவழி தாக்குதல் நடவடிக்கைகள் விரிவுப்படுத்தப்படுவதாக இஸ்ரேலிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 11 வாரங்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரில் 20,915 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸாவில் ஹமாஸ் தரப்பினரால் நடத்தப்படும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.